**பொலிஸ் வெகுமதி நிதியம் - 2019**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று உரித்து மாற்றங்களுக்கான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 73(4) ஆம் பிரிவு (65 ஆம் அதிகாரம்) மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் தவிர நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமமம் இலக்கம் 01 இன் 150 ஆம் பந்தியின் பிரகாரம் தமது பிரகாரம் நிறுவகம் தொடர்பா சட்டரீதியான, நியதிச்சட்ட நிலைமைகள் தொடர்பாகவும் நிறுவகத்தின் செயற்பாடுகள் மற்றும் ஆரம்ப செயற்பாடுகளில் தன்மை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதும் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுஎ திர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் | உரிய தகவல்கள் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 02 பொலிஸ் வட்டாரங்களுக்கு பொதுவான கட்டுநிதியின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 20,450,725 மற்றும் மோட்டார் வாகன கட்டுநிதியின் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,407,870 தொக | 2020 ஆம் ஆண்டில் திரட்டிய நிதியத்திற்கு மேற்கொண்ட சீராக்கங்கள் மூலம் 2019 ஆம் ஆண்டில் | ஆண்டிற்குரிய செலவினம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | 2020 ஆம் ஆண்டின் போது மீள் பணமாக தீர்வுசெய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது அப்பெறுமதி வருமானக் கூற்றில் பொதுவான கட்டுநிதி செலவினம் மற்றும் மோட்டார் வாகன வெகுமதி கட்டுநிதி செலவினமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தவறினை சீராக்க நடவடிக்கை எடுப்பேன் | வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் 11 நீதிமன்றங்களிலிருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,967,615 என குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 3,582,828 ஆக கிடைத்திருந்த காரணத்தினால் ரூபா 1,615,213 ஆல் பெறவேண்டிய நீதிமன்றத்தண்டப் பண வருமானம் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 04 நீதிமன்றங்களிலிருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்றத்தண்டப் பண வருமானமாக ரூபா 11,017,998 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 3,265,230 மாத்திரம் கிடைத்திருந்த காரணத்தினால் ரூபா 7,752,767 ஆல் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த கிடைக்க வேண்டிய நீதிமன்றத்தண்டப் பண வருமானத்தை விட 2020 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 1,231,035 தொகை நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டது. ரூபா 7,843,845 தொகை கிடைக்க வேண்டிய நீதிமன்றத்தண்டப் பணமாக கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததை நாட்குறிப்பு பதிவின் மூலமம் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டின் இறுதி கிடைக்க வேண்டிய தண்டப்பண வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிலையான வைப்பு வட்டி வருமானம் கணக்கீடு செய்த தவறு காரணமாக ரூபா 4,688,010 கூடுதலாகவும் வட்டி வருமானம் தவறான வீதத்தில் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 4,981,809 ஆல் குறைத்தும் முதலீட்டு வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை | ஆண்டிற்கான வட்டி வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 4 நிலையான வைப்புகளுக்குரிய கணக்கீடு செய்யப்பட்ட கிடைத்த வட்டி முதிர்வடையும் போது ரூபா 1,066,640 தொகை கூடுதலாகவும் மேலும் 7 நிலையான வைப்புகளுக்குரிய கணக்கீடு செய்யப்பட்ட வட்டியை வட ரூபா 4,928,632 குறைவாகவும் கிடைத்திருந்த காரணத்தினால் அதற்காக உரிய சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை | ஆண்டிற்கான வட்டி வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.2.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் 28 நீதிமன்றங்களின் நீதிமன்ற வருமான உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்த அட்டவணையுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் தண்டப்பண வருமானம் 16 நீதிமன்றங் களிலிருந்து ரூபா 6,481,780 ஆல் குறைத்தும் 12 நீதிமன்றங் களிலிருந்து ரூபா 43,258,080 ஆல் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 22 நீதிமன்றங்களிலிருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,453,981 குறைத்தும் 13 நீதிமன்றங் களிலிருந்து ரூபா 43,258,080 ஆல் கூடுதலாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் இத்தவறினை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நீதிமன்ற தண்டப்பண வருமானத்தை சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை

மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் (அ),(ஆ) மற்றும் (ஊ)) பிரிவுகளின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் நிதியத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | பொலிஸ் வெகுமதி நிதியத்தின் கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்படாதிருந்த நாளது வரையாக்கப்பட்ட நிறுவன கட்டமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போதய பதவியணி தொடர்பான விபரங்கள் இத்துடன் அனுப்பிவைக்கின்றேன் | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலிஸ் அனுசரணை நிதியத்திற்கு வழங்கியிருந்த ரூபா 2,000,000 முற்பணத் தொகை 19 வருடங்களை விட மிகையான காலம் முதல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. | கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு உள்ள இயலுமை பரீட்சிக்கப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகளை எடுப்பேன். | முற்பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | விஷேட சுற்றி வளைப்பு களுக்காக நிதியத்தில் இருந்து வெகுமதிகள் செலுத்தும் போது வழக்குகள் முடிவடைவதற்கு முன்னர் 50 சதவீதம் செலுத்தப்படுவதுடன். மீதி வழங்கு முடிவடைந்தவுடன் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. எவ்வாறாயினும் வழக்கு விடயங்கள் முடிவடையாமை காரணமாக 381 வழக்கு கோவைகளுக்கு உரிய ரூபா 85,064,711 பெறுமதியான தொகை 01 வருடம் முதல் 18 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தீர்வு செய்யப்படாமல் காணப்பட்டது. | வழக்கு விடயங்கள் முடிவடைந்தவுடன் எஞ்சிய வெகுமதி தொகையை செலுத்துமாறு கொடுப்பனவு அலுவலகத்திற்கு அறிவூட்டுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பேன். | செலுத்த வேண்டிய விஷேட வெகுமதிகளுக்குரிய வழக்கு விடயங்கள் முடிவடையும் செயன் முன்னேற்றம் தொடர்பில் பொருத்தமான நடைமுறை மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் வரை 15 மாதங்களுக்காக நீதிமன்றம் ஒன்றிடமிருந்து பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தின் மொத்தம் ரூபா 1,285,832 தொகை நிதியத்திற்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்திடமிருந்து பெறவேண்டிய வெகுமதி தொகையை ஆராய்ந்து பாரத்து நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் யாழ்ப்பாண பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற பதிவாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமான சேகரிப்பினை தாமதமின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | உடனடி தண்டப்பணம் அறவிடுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டதுடன் 20 மாவட்டங்களுக்குரிய 2018 மற்றும் அதற்கு முன்னர் கிடைக்க வேண்டிய ரூபா 22,269,797 தொகை மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்றிருந்ததுடன் 2 நீதிமன்றங்களிலிருந்து 2017 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெறவேண்டிய ரூபா 492,040 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிலைய தண்டப்பணம் நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் வெகுமதி தொகையை செலவு வைக்குமாறு மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் தாமதமாவதால் 2020.06.16 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமான சேகரிப்பினை தாமதமின்றி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மொத்த வருமானம் ரூபா 3,467 மில்லியனாக இருந்த போதும் வெகுமதிக்கான செலவினம் ரூபா 906 மில்லியனாக இருநதமையால் நிதியத்தின் எதிர்பார்த்த நோக்கங்களுக்காக பங்களிப்புச் செய்தல் ஆண்டின் வருமானத்திலிருந்து 26 சதவீதமான குறைந்த பெறுமதியொன்றாகும். | 2020 ஆம் ஆண்டின் போது பிரிவு அலுவலகங்களுக்காக வெகுமதி கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள கட்டுநிதி எல்லையில் ஆகக்கூடுதலாக பயன்படுத்தி வெகுமதிகளை கொடுப்பனவு செய்வதற்கு நடடிக்கை எடுக்குமாறு கொடுப்பனவு அலுவலகங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதியம் தாபிக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றவதற்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும். |
| (ஆ) | மோட்டார் வாகன கடமைகளில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களால் மோட்டார் வாகன தண்டப்பண வருமானமாக மீளாய்வாண்டில் ரூபா 1,219 மில்லியன் நிதியத்திற்கு சேகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மோட்டார் வாகன வெகுமதிக்காக ரூபா 194 மில்லியன் அதாவது வருமானத்தில் 16 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மோட்டார் வாகன தண்டப்பண வருமானம் 29 சதவீதத்தினால் மோட்டார் வாகன வெகுமதிக் கொடுப்பனவில் 14 சதவீத அதிகரிப்பொன்று இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | நிதியம் தாபிக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றவதற்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது நிதியம் உழைத்திருந்த மொத்த வருமானம் ரூபா 3,467 மில்லியனாக இருந்தது. அக்காலப்பகுதியில் ரூபா 2,483 மில்லியனால் நிதியுள்ள முதலீடு அதிகரித்திருந்தது. நிதியத்தின் எதிர்பார்த்த வருமானத்தின் 80 சதவீதம் வெகுமதிக்கொடுப்பனவிற்காகவும் செயலாற்றல் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்த போதும் மொத்த வருமானத்திற்கு ஒப்பாக 71 சதவீதம் முதலீட்டை அதிகரிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது. | தொழிற்படு மூலதன அதிகரிப்பு நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படுகின்றது. அது நிதியத்தின் நிதி ஸ்திரதன்மை மற்றும் தொடர்ந்து இயங்குதலை உறுதிப்படுத்தும். எதிர்காலத்தில் வட்டி வருமானத்தின் பேரில் உத்தியோகத்தர் நலன்களுக்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நிதியத்தின் நிலையான வைப்புக்களின் பெறுமதி வருடாந்தம் அதிகரித்திருந்த போதும் நிதியம் தாபிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். |

## 2.4. முகாமைத்துவ செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை மொத்தம் ரூபா 4,694 மில்லியன் தொகை நிலையான வைப்புக்கள் மீது வட்டி வருமானம் என உழைத்திருந்த போதிலும் இந்த வருமானம் நிதியம் நிறுவுவதற்கான குறிக்கோளினை நிறைவேற்றிக் கொள்வதற்காக பயன்படுத்தியது எவ்வாறு என்பது தொடர்பாக நிதியம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | நாட்டில் உருவாகியுள்ள நிதிசார் மற்றும் ஏனைய பாதகமான குறிகாட்டிகள் பேரில் நிதியத்தின் நிதி ஸ்திரதன்மை மற்றும் தொடர்ச்சியான நிலையான தன்மைக்கு ஏற்படக்கூடிய தாக்கத்தின் பேரில் நிரந்தர நிதி அடிப்படையொன்று இருத்தல் மிகவும் அவசிமானதொன்றாகும். | நிலையான வைப்புக்கள் வருமான நிதியத்தினை தாபிக்கும் நோக்கங்களுக்காக எவ்வாறு பயன்படுத்தப்பட்டதென்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |